செ.வெ.எண்.56 /செப்டம்பர் நாள் : 24.09.2019

**பத்திரிக்கை செய்தி**

கோவையில் அக்டோபர் மாதம் 14ம் தேதி முதல் 25ம் தேதி வரை இந்திய விமானப் படையில் பயிற்றுநர் பணிக்கு ஆள்சேர்ப்பு முகாம் நடைபெற உள்ளது. கோவை பாரதியார் பல்கலைகழக உடற்கல்வி அரங்கில் நடக்கும் ஆள்சேர்ப்பு முகாமில் தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவு, லட்சதீவு ஆகிய யூனியன் பிரதேசங்களை சேர்ந்த ஆண் விண்ணப்பதார்கள் கலந்து கொள்ளலாம். இளநிலை பிரிவில் பி.ஏ.ஆங்கிலம், பி.எஸ்.சி இயற்பியல், உளவியல், வேதியியல், கணிதம், ஐ.டி, கணிப்பொறியியல், புள்ளியியல் அல்லது பிசிஏ-வை 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையத்தில் பி.எட் படிப்பை 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவர்கள் 19 ஜனவரி 1995-2000க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்திருக்க வேண்டும்.

முதுநிலை பிரிவில் எம்.ஏ. ஆங்கிலம், உளவியல், எம்.எஸ்.சி இயற்பியல், கணிதம், ஐ.டி, கணிப்பொறியியல், புள்ளியியல் அல்லது எம்.சிஏ-வை 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையத்தில் பி.எட் படிப்பை 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவர்கள் 19 ஜூலை 1992-2000க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்திருக்க வேண்டும். இத்தேர்வினை எதிர்கொள்வது குறித்தும், பயிற்சி விவரங்கள் மற்றும் தேர்வு விவரங்கள் குறித்தும், ஒருநாள் பயிற்சி முகாம் கோவை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 28.09.2019 அன்று காலை 10:00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், கூடுதல் தகவல்களுக்கு www.airmenselection.cdac.in என்ற இணையதளம் வாயிலாக தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**